**தெஹியத்தகண்டி பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹியத்தகண்டி பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தெஹியத்தகண்டி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடை வாடகைக்கான மீளளிக்கத்தக்க வைப்பு மீதி ரூபா 2,364,450 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இறுதி கணக்குகள் - 2023 மூலம் தேவையான திருத்தம் மேற்கொள்ளப்படும். | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்குரிய கடை வாடகை பட்டியல் ரூபா 803,948 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | ஆரம்ப கடை வாடகை மீதிக்கும் உண்மையான கடை வாடகை மீதிக்கும் இடையே உள்ள வேறுபாட்டை நீக்கி, இறுதி கடை வாடகை மீதி சீர்செய்யப்பட்டு ஆண்டுக்கான கடை வாடகை மீதி கணக்கீடு செய்யப்பட்டது. | ஆண்டுக்கான பட்டியல் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | பிராந்திய அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 04 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 20,941,054 மொத்த பெறுமதி மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பிழை 2023 இன் இறுதி கணக்குகள் மூலம் சீர்செய்யப்படும். | சரியாகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 2,903,119 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 1,918,824 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,649,311 | 1,483,222 | 1,555,086 | 2,151,246 | 1,539,312 | 1,482,785 | 1,355,649 | 2,223,110 |
| (ii) | வாடகை | 16,341,697 | 10,844,798 | 19,072,517 | 1,893,475 | 15,028,444 | 14,841,767 | 6,390,997 | 10,121,194 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 2,102,500 | 2,331,712 | 2,167,062 | 526,300 | 2,102,500 | 1,956,962 | 1,822,912 | 361,650 |
| (iv) | ஏனைய வருமானம் | 4,387,860 | 5,198,578 | 5,398,102 | 269,689 | 3,298,420 | 3,669,780 | 3,654,808 | 469,213 |
| (v) | கூட்டுத் தொகை | 24,481,368 | 19,858,310 | 28,192,767 | 4,840,710 | 21,968,676 | 21,951,294 | 13,224,366 | 13,175,167 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| **(அ) வீதவரிகளும் வரிகளும்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள வீதவரி மீதி ரூபா 2,151,246 ஆக இருந்தது. | கடந்த பல ஆண்டுகளாக பொருளாதார மற்றும் சுகாதார நெருக்கடிகள் காரணமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வருமான நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ) வாடகை வருமானம்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள வாடகை மீதி ரூபா 1,643,999 ஆக இருந்தது. | தற்போது நிலுவைகள் அறவிடப்பட்டு வருகின்றதுடன் அது தொடர்பான கடை உடன்படிக்கைகள் இரத்து செய்யப்பட்டு உள்ளூராட்சி சபையிடம் கடைகள் ஒப்படைக்கப்பட்டு, மீள் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி சபை ரூபா 34,910,000 பெறுமதியான 06 நிலையான வைப்புக்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய பதிவேடொன்றை பேணியிருக்காததுடன் பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி சரியாகக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பதிவேடொன்று பேணப்பட வேண்டியதுடன் பெற வேண்டிய வட்டி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 250,391,167 பெறுமதியான 08 கணக்கு மீதிகளுக்காக பேரேட்டுக் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து மீதிகளும் எதிர்காலத்தில் பேரேட்டுக் கணக்குகள் மூலம் வழங்கப்படும். | ஒவ்வொரு மீதிக்கும் தனித்தனி பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி சபைக்குட்பட்ட பஸ் நிலையப் பகுதியில் உள்ள 49 கடைகளில் 20 கடை உரிமையாளர்களால் உப குத்தகைக்கு விடப்பட்டுள்ளதையும், உடன்படிக்கையின் பிரகாரம் அது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் சபையால் எடுக்கப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. | இந்த கடை உரிமையாளர்கள் தற்போது கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டு இது தொடர்பாக சட்ட நடவடிக்கையை எடுப்பதற்காக கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | உப-குத்தகையை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி சபை அதிகார வரம்பிற்குட்பட்ட ஆதனம் தொடர்பாக 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரி விதிக்கப்படுகிறதுடன் அந்த காலத்தில் ஆதனத்தை மதிப்பிட்டு அதற்கான வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக மட்டக்களப்பு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு வருடாந்தம் பல கோரிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் அவர்களின் தாமதம் காரணமாக புதிய மதிப்பீட்டை மேற்கொள்ள முடியவில்லை. | வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டு உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி சபையின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 311,267,148 தொகையான நிலையான சொத்துக்களின் வகைப்படுத்தல்கள் தொடர்பான பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | இது எதிர்காலத்தில் சீர்செய்யப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பெறுமதிகள் பதிவுசெய்யப்பட வேண்டியதுடன் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான 44 மயானங்கள் மற்றும் 38 விளையாட்டு மைதானங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆதனங்களை முறையான அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை மகாவலி அதிகாரசபையால் முறையாக கையளிக்கப்பட்ட பின்னர் மதிப்பீடுகளை மேற்கொள்ள முடியும். | பெறுமதிகள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி சபைக்கு சொந்தமான 03 வாகனங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த வருடத்தில் இந்த பிழை சீர்செய்யப்படும். | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி சபைக்கு நன்கொடைகளாகப் பெறப்பட்ட 27 பொருள் உருப்படிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | சபையின் வசம் உள்ள 05 பயன்படுத்த முடியாத வாகனங்கள் 9 வருடங்களாக விளைவற்றிருந்தன. | தற்போது கிழக்கு மாகாண சபை விளைவற்ற வாகனங்களை ஏலமிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. | விளைவற்ற நிலையில் உள்ள வாகனங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சேர்வீஸ் செய்யப்பட்டு மீண்டும் பயன்படுத்தக்கூடிய சபைக்குச் சொந்தமான பெக்கோ லோடர் (backhoe loader) 2021 முதல் விளைவற்றிருந்தது. | இதனை திருத்தம் செய்வதற்கு ஏறத்தாழ ரூபா 35 இலட்சம் கிரயம் ஏற்படும். அந்த பணத்தை சபையால் தாங்கிக்கொள்ள முடியாததால் பழுதுபார்க்க முடியவில்லை. | செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதில், இதற்கு முன்னுரிமை அளித்து, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | சபை பயன்படுத்திய 08 வாகனங்களின் உரிமைத்துவத்தை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு சபை நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | UNEP ஆல் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனங்களை சபையால் உரிமை மாற்றம் செய்யமுடியவில்லை. மேலும் ஏனைய அமைப்புக்களால் வழங்கப்பட்ட மற்றும் நன்கொடையாக வழங்கப்பட்ட வாகனங்களின் முறையான உரிமை மாற்றங்கள் சபையிடம் காணப்படாததால், வாகனங்களை உரிமை மாற்றம் செய்யமுடியவில்லை. | வாகனங்களின் உரிமைத்துவம் சபையின் பெயருக்கு மாற்றப்பட வேண்டும். |

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் 02 வருமான பரிசோதகர் பதவிகள் உட்பட 13 பதவிகள் சபையில் வெற்றிடமாக இருந்தன. | கிழக்கு மாகாண சபையினால் இந்த ஆட்சேர்ப்புக்கள் தாமதப்படுத்தப்படுவதனால், இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 123,060 பெறுமதியான 02 கடன் மீதிகள் செலுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |